"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பதுவியர்த்தம்"

# காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

93-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ஆ வைகாசிமீ 4-ந்உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 17-ம் இல.

"சந்ததி விருத்தியைத் தேவையான அளவுக்குக் கட்டுப்படுத்திக் கொள்ளச் சுய கட்டுப்பாடு ஒன்றுதான் நிச்சயமான மார்க்கம். கர்ப்பத்தடைக் கருவிகளைப் பயன்படுத்தினுல் அது மனித குலத்தின் தற்கொலையாகும்."

— காந்தியடிகள்.

# பெரிய பெருநாள் செய்தியில்
# பரி. தந்தையின் இருபெரும் கவலைகள்

## ● வியற்னும் யுத்தம் ● நிறத்துவேஷம்

இவ்வருடம் பரிசுத்த தந்தை ஈஸ்ரர் தினத்தன்று சம்பேதுரு தேவாலயசதுக்கத்தில் கூடிநின்ற 2இலட்சம் பக்தர்களுக்குக் கூறியருளிய வார்த்தைகளில் தமக்குள்ள இரு பெரும் கவலைகளை அவர்களுக்கு வெளியிட்டு, அவற்றை நீக்க செபித்துக்கொள்ளுமாறு வேண்டியருளினுர்.

முதலாவது குறிப்பிட்டகவலை வியற்னும் தேச யுத்தத்தைப் பற்றியே. இத்தனை வருடகாலமாக நடந்துவரும் யுத்தத்தினுல் உலகத்துக்கும் விசேஷமாய் அத்தேச மக்களுக்கும் ஏற்பட்டுள்ள துன்பங்களையும் மேலும் யுத்தம் நீடிக்குமானுல் அது உலக யுத்தமாகக்கூடிய ஆபத்தையும்பற்றி மிகக்கவலையுடன் பரிசுத்ததந்தை குறிப்பிட்டார். அதன்பின் உலகத்தில் இன்று தாண்டவமாடும் நிறத்துவேஷத்தின் பயங்கரதன்மையை எடுத்துக்காட்டி அத்துவேஷத்துக்கு அண்மையிற் பலியான டக்றர் லூதர்கிங் அவர்களுடைய சிறப்பான சேவையைப் புகழ்ந்து அவரது குடும்பத்துக்குத் தமது அனுதாபத்தைத் தெரிவித்தார்.

## அங்கிளிக்கன் கோவிலில் கத்தோலிக்க பாடகர்கள்

இருவருடங்களுக்குமுன் இங்கிலாந்து தேசத்தில் லிவர்ப்பூல்நகரில் கத்தோலிக்கரது மகாதேவாலயம் கட்டி எழுப்பப்பட்டு அபிஷேகம் செய்யப்பட்டபோது அங்நகர அங்கிளிக்கன் தேவாலய பாடகர்குழுவினரும் சேர்ந்து தேவதோத்திரங்கள்பாடி ஒப்புக்கொடுத்தனர். வரும் வாரம் அங்கிளிக்கன் சபையினர் அந்நகரில் ஒரு சிறந்த தேவாலயம் கட்டி முடித்து அபிஷேகசடங்குகள் நடத்த இருக்கின்றனர். அத்தருணம் கத்தோலிக்க பாடகர் குழுவினருடன் சேர்ந்து அவர்களது தேவாலயத்தில் தேவதோத்திரங்கள்பாடி திருவழிபாட்டில் கலந்துகொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

## தேவ அழைத்தல் குறைவது ஏன்?

சித்திரை மாதம் 28-ந்திகதி கொண்டாடப்பட்ட தேவ அழைத்தல் தினத்துக்கென பரி. தந்தை விடுத்தசெய்தியில் குருமார் சந்நியாசிகளின் தொகை குன்றிவருவதையும், அவர்களின் தொண்டு தேவைப்படுபவர்களின் தொகைகூடி வருவதையும் சுட்டிக்காட்டி இருக்கின்ருர். உலகத்தவர்களிடையேதேவனைப் பற்றிய சிந்தை குறைந்துவருவதும், உலக இன்பங்களே பெரிதெனும் எண்ணம் வளர்ந்துவருவதுமே இதற்குக் காரணமாகும். பரிசுத்த தந்தை இச்செய்தியில் பெற்ருேர் தம்பிள்ளைகளைத் தேவ சிந்தைஉடையவர்களாக வளர்க்க வேண்டிய கடமையை எடுத்துக்காட்டி இளைஞர்களுக்கும் நேராக விண்ணப்பித்திருக்கின்ருர். திருச்சபையின் தேவைகளை கிறிஸ்தவ இளைஞர்கள் மறந்துவிடமாட்டார்களென்றும், தேவ அழைத்தலுக்குச் செவிசாய்ப்பது வீரதீரச்செயலெனவும் பரிசுத்ததந்தை எடுத்துக்கூறியிருக்கின்ருர்.

## அங்கிளிக்கன் சபையினரிலிருந்து

### பரி. தந்தைக்கு ஓர் அன்பளிப்பு

பல கிறிஸ்தவசபைகளினரும் இவ்வருடம்செய்யும் கூட்டுப் பிரயாணத்தின்போது அங்கிளிக்கன் சபையினரின் சார்பில் பரிசுத்த தந்தைக்கு ஓர் அன்பளிப்புச் செய்ய முடிவு செய்திருக்கின்றனர். அது அவர்களது சற்பிரசாத திருவழிபாட்டுச் சடங்குகள் அடங்கிய பொன் எழுத்துக்களால் எழுதப்பட்ட ஒரு நூலாகும். இப்பிரயாணிகளின் மூன்றுவாரப் பிரயாணம் ரோமாபுரிக்கும் பரிசுத்த நாட்டுக்குமாகும்.

## வத்திக்கான் ஆட்சியில் ஒரு புதிய பதவி

மந்திரிமார்சபைக் கூட்டங்களை ஆயத்தப்படுத்தவும், மந்திரிமாருக்கிடையிலுள்ள தொடர்புகளைக் கவனித்துக்கொள்ளவும், பிரதமமந்திரிக்குத் துணைபுரியவுமென ஜனநாயக அரசாங்கங்களில் மந்திரிசபைக் காரியதரிசி என ஒரு பதவி உண்டு. இப்பதவிக்குச் சமமான ஒரு பதவி வத்திக்கான் ஆட்சிமுறையிலும் சமீபத்தில் நிறுவப்பட்டிருக்கிறது. ஒரு பிரதம மந்திரிக்குரிய பல கடமைகளும் புதிதாகக் கருதினுல் சிக்கோஞானிக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அவருக்குத் துணைசெய்யவே இப்புதுப்பதவி. அரசகரும காரியாலயத்தில் கடமையாற்றிவந்த யூசோப்பே டி மார்க்கி என்பவரே இப்பதவியில் பாப்பரசரசல் அமர்த்தப்பட்டிருக்கின்ருர்,

## ஒருபெருங் கலகத்தை குருமார் நிறுத்தினர்

தென் அமெரிக்க றியோடி ஜனீரோ நகரத்தில் உயர்வகுப்பு மாணவர்களுக்கும் அங்நகர பொலீசாருக்குமிடையில் அண்மையில் நடந்த கைகலப்புகளில் ஒரு மாணவன் உயிரிழந்தான். அவனது பிரேத அடக்கத்தில் ஊர்வலம் சென்ற மாணவர் மீளவும் பொலீசாருடன் மோதிக் கொள்வரோ என அஞ்சப்பட்டது. ஆனுல் அப்படி நேரிடாது அங்நகரக் குருமார் காத்துவைத்தனர். ஊர்வலத்தில் மாணவர்கள் நடுவில் செல்ல, அவர்களின் இருபக்கத்திலும் பலவரிகளில் குருமார் நூற்றுக் கணக்கானேர் நடந்துசென்றனர். மேலும் குருமார் இருபகுதியினரையும் ஆவேசம் கொள்ளவிடாது பல பிரயத்தனங்களும் செய்துகொண்டனர்.

## செக்கோசிலவாக்கியாவில் ஜனநாயக கொமியூனிஸ்தமா?

சென்ற சிலமாதங்களாக செக்கோசிலாவாக்கியாவிலே கொமியூனிஸ்தருள் பலமாற்றங்கள் தோன்றியிருக்கின்றன. சகல சமய விரோதியான தலைவர்கள் தலைமைப்பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுவிட்டனர். நூற்றுக் கணக்காக மறியலில் வைக்கப்பட்டிருந்த குருமார் மேற்றிராணிமார் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். கருதினுல் பெருன் அடிகளாரைத் திரும்பவும் தனது நாட்டுக்குச்செல்ல அனுமதிக்கவும் யோசனைகள் நடக்கின்றன. சனங்களுக்கு இதுகாலவரையும் செய்யப்பட்ட அநீதிகள் நீக்கப்படுகின்றனவாம். ஆகவே அத்தேசத்தில் இன்று ஒருவகை ஜனநாயக கொமியூனிஸ்தம் நிலவுவதாகக் கூறப்படுகின்றது.

## தேசத்தொண்டுக்கு மக்களைத் தூண்டுகின்றனர்

மெக்சிகோ தேசத்திலுள்ள சுமார் 80 மேற்றிராணிமார் அண்மையில் கூடி ஆலோசித்தபின் விடுத்த கூட்டு நிருபத்தில் தமது தேசமக்களைத் தேசத்தொண்டில் தீவிரமாகப் பங்கு எடுத்துக்கொள்ளும்படி தூண்டி எழுதியிருக்கின்றனர். பெரும்பாலான மக்கள் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறைகொள்ளாது இருக்கும் நிலைமையைக் கண்டித்து, முன்னேற்றம் அடைந்துவரும் நாடுகளைப் பின்பற்றக் கேட்டிருக்கின்றனர், மெக்சிக்கோ நாட்டில் செல்வந்தர்கள் மிகச்சிலரே. பெரும்பாலானேர் பரம ஏழைகள். இந்நிலைமை மாறிச் சகலரும் குறைவின்றி வாழக் கூட்டுறவு முயற்சிகளில் ஈடுபடும்படியாகவும் கத்தோலிக்கர் மத்தியில் மக்களைச் சமூகத்தொண்டில் ஈடுபடச் செய்யத்தக்க தலைவர்கள் தோன்ற வேண்டுமென்றும் கேட்டிருக்கின்றனர்.

## தேசிய "சினோட்" கூட்டத்தில் தவிர்க்கவேண்டிய அபாயங்கள்

வரும் ஆனிமாதத்தில் கொழும்பில் நடைபெற இருக்கும் அகில இலங்கைத் தேசிய "சினொட்"கூட்டத்தில் ஏற்படக்கூடிய இரு அபாயங்களை முன்னுள் புரொட்டஸ்தாந்து மதகுருவாயும் இன்று பிரபல்ய கத்தோலிக்கராக விளங்குபவருமாகிய திரு: பிறயன் டி கிறட்சர் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். அவை பின்வருமாறு:

1. கூட்டம் நடைபெறும் முறைகளைப்பற்றிய ஆரம்ப ஒழுங்குகள், இல்லறத்தவருக்குக் கொடுக்கப்படும் பங்கு முதலியவற்றில் குதர்க்கம் எழாது தவிர்க்கவேண்டும்: இல்லறத்தவர்களுக்கு முன்னிலும்கூடிய பங்கு கொடுபடவேண்டுமென்பது உண்மையே; ஆயினும் குருமார், மேற்றிராணிமாருக்கு உரிய பங்கை அவர்கள் கவரமுயற்சிப்பது தகாது.

2. இறுதி நோக்கம் என்னவென்பதை மறந்து சிறுகருமங்களிலே அதிகம் விவாதம்செய்து நேரத்தைக் கழியாது, கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டும். கூட்டம் நடத்தப்படும் மொழி முதலிய பிரச்சினைகள் "சினொட்" நடத்தப்படும் நோக்கத்தைப் பாதிக்கவிடாது காத்துக் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### வைகாசி

5 ஞா. பாஸ்கா விழாவுக்குப்பின் 3ஆம் ஞாயிறு [வெ]
6 தி. கிழமைப் பூசை [வெ]
7 செ. புனித ஸ்தனிஸ்லாஸ் [சி]
8 பு. கிழமைப் பூசை [வெ]
9 வி. புனித கிரகோரியார் [வெ]
10 வெ. புனித அந்தோனியார் [வெ]
11 ச. புனித பிலிப்பு, யாகப்பர் [சி]


# சத்தியவேத பாதுகாவலன்

1968-ம்ஆண்டு வைகாசிமீ 4-ந்உ


## பொதுநிலை அப்போஸ்தலத்துவத்தின் குறிக்கோள்கள்

கிறிஸ்துநாதரின் மீட்புவேலை ஆன்மீக மயமானது எனினும், அது இலௌகிக அமைப்பு முழுவதையும் புதுப்பிப்பதாயுள்ளது. ஆன்மீக அமைப்பு இலௌகிக அமைப்புடன் தொடர்புள்ளதாயிருக்கின்றது. ஏனெனில், தேவன் முழுஉலகையுமே கிறிஸ்துவில் புதுப்பிக்கச் சித்தங்கொண்டிருக்கிறார். ஆகவே, பொதுநிலைக் கிறிஸ்தவரின் பணி ஆன்மீகச் சார்பும் இலௌகிகச் சார்பும் உடையதாகும்,

கிறிஸ்துவின் நற்செய்தியையும் தேவஅருளையும் உலகிற்குக் கொண்டுவரும் நற்பணியானது குருமாரின் போதனை மூலமும் தேவதிரவிய அனுமானங்களின் மூலமுமே பிரதானமாகச் செய்யப்படுகின்றது. ஆனால், தம் மேய்ப்பருடன் ஒன்றுபட்ட பொதுநிலையினருக்கும் இதில் பங்குண்டு. அவர்கள் தமது நற்சீவியத்தினாலும், நற்கருமங்களினாலும் பிறர் தேவனை அடையுமாறுசெய்வதுடன், கூடியநேரங்களில் அவிசுவாசிகளுக்கு கிறிஸ்துவைப்பற்றி எடுத்துக்கூறவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். பொதுநிலையினர் கிறிஸ்தவ கோட்பாடுகளைக் கடைப்பிடித்து அவற்றைப் பிறருக்கு விளக்கி, ஆதரித்து வரவேண்டுமென்று சங்கம் விரும்புகின்றது.

இவ்வுலக வாழ்க்கையின் நன்மைகளான, குடும்பம், செல்வம், கலாச்சாரம், பொருளாதார முன்னேற்றம், தொழில்கள், கலைகள், அரசியல் ஸ்தாபனங்கள் ஆகியனவெல்லாம் மனிதன் தன் குறிக்கோளை அடைவதற்கு துணைபுரியக்கூடியனவாகையால் அவற்றுக்கும் ஒரு பெறுமதி உண்டு. தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட யாவுமே நன்மையானவை. கிறிஸ்துவோடு ஐக்கியமான மனிதனுக்குப் பணிபுரிவதால் அவை மேலும் புனிதமடைகின்றன.

ஆனால், சென்மபாவத்தின் காரணமாக ஒழுக்கம் சீர்கெட்டமையாலும், மனிதரின் ஏற்பாடுகளினாலும் உலகப் பொருளே உண்மைப்பொருள் எனக்கருதும் இன்றைய நாகரிகத்தின் காரணமாகவும் இலௌகிகப் பொருள்களின் உபயோகம் தவறானவழியில் செல்கிறது, இத்தவறைத் திருத்தி உலகப் பொருள்களின் சரியான உபயோகத்தை நிலைநாட்டுவது திருச்சபையின் கடமை.

அப்போஸ்தலத்துவத்தின் ஒவ்வொரு கருமமும் அன்பினால் தூண்டப்பட்டதாயிருக்க வேண்டும். அவற்றுட் சில அன்பை வெளிப்படையாகக் காட்டுவனவாய் கிறிஸ்துவின் மீட்புவேலைக்கு அடையாளமாய் விளங்கவேண்டும். எப்போதும் திருச்சபை அன்பை வெளிப்படுத்தும் பிறசிநேகக் கிரிகைகளை உரிமையுடன் மேற்கொண்டு வந்திருக்கிறது. எவ்வளவோ முன்னேற்றங்கள் மலிந்த இந்நாட்களிலும் அவை அவசியமாக இருக்கின்றன,

உணவு, உடை, இருப்பிடம் மருந்து, தொழில், கல்வி அற்றோருக்கும், பல்வேறு இன்னல்களால் துன்பமுற்று மெய்யான மனித வாழ்க்கை வாழமுடியாதிருப்போருக்கும் கிறிஸ்தவ அன்புடன் உதவவேண்டியது செல்வம் மிக்க ஆட்களினதும், சமூகங்களினதும் கடனாகும். இவ்வாறு உதவும்போது, உதவி பெறுபவன் தேவனின் சாயலாகப் படைக்கப்பட்டவன் என்பதையும், அவனுக்குச் செய்யும் உதவி கிறிஸ்துநாதருக்கே செய்யப்படுகின்றது என்பதையும் நினைவுகூர வேண்டும்.

அத்துடன் பின்வருவனவும் நினைவிற் கொள்ளற்பாலன. நீதியின்படி செய்யவேண்டிய கடன்கள் முதலில் நிறைவேற்றப்பட வேண்டும். தீங்குகளின் விளைவுகள் மட்டுமல்ல, அவற்றின் காரணங்களும் நீக்கப்பட வேண்டும். உதவிபெறுவோர் படிப்படியாக சுயதேவையைப் பூர்த்திசெய்யக் கூடிய நிலையை அடைய வழி செய்யவேண்டும். உதவி பெறுபவரின் மதிப்பும் சுதந்திரமும் பாதிக்கப்படாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

## சிறியபுஷ்பத்தின் ஞாபகங்கள்

இற்றைக்குத் 90வருடங்களின்முன் அந்தப்புனிதமானவீட்டில் கடிகாரம், ஆபரணம் செய்கிறஒருவரும், அவருடைய நான்குபுதல்விகளும் வசித்திருந்தனர். அவர் தாரமிழந்தவர். அங்கே இன்று கல்லாலமைந்த ஒரு வாங்கிலே கடிகாரஞ்செய்பவரினதும், அவரின் இளையபுதல்வியினதும் கற்சுரூபங்கள் காட்சியளிக்கின்றன. இப்புதல்வி தனது24 ஆம்வயதில் அமரத்துவமடைந்தாள். இன்று அவள் திருச்சபையிலே பிரஸ்தாபம் பெற்ற ஓர் அர்ச்சியசிஷ்டவள், அவள் தந்தைக்கும், தாய்க்கும் முத்திப்பேறு பெற்றபட்டம் அருளுவதற்கான விசாரணை 1964ஆம்ஆண்டு ஆரம்பமானது.

இந்தப்புனிதவதி வேதபோதகநாடுகளின் பாதுகாவலாளியான லிசியே பதி அர்ச். தெரேசம்மாள் தானென்று எடுத்துக்கூற வேண்டியதில்லை. அவளுடையகல்லறை அவள்மரணமடைந்த கார்மேல்மடத்துச் சிற்றாலயத்தில் இருக்கின்றது. அவளுடையதாயும், தந்தையுமான லூயிஸ் மாட்டீனும், அசேலியேமாட்டீனும் தங்கள்புதல்விக்கு மகிமையாகப் பிரதிட்டைசெய்யப்பட்ட பசிலிக்காஎனப்படும் புதிய மகாதேவாலயத்தின் பின்புறமாக அடக்கஞ்செய்யப் பட்டிருக்கிறார்கள்.

மாட்டீனின் இல்லமும், மகாதேவாலயமும், கார்மேல்மடமும் இன்று பெரும்யாத்திரைத்தலங்களாய் விளங்கி ஆண்டுதோறும் பல்லாயிர யாத்திரிகர்களால் தரிசிக்கப்பட்டுவருகின்றன.

# யார் கடவுள்?

— பி. ஜே. அமிர்தநாயகம் —

அநேக கிறீஸ்தவர்கள்தானும் சொல்ல மாட்டார்கள். அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்தால் கிழமையிலே ஒரு குறிக்கப்பட்டநாள் அவர்களுக்கு மிகவும் முக்கியநாளாக இருக்கிறது; பல்லிச்சாத்திரம் குருவிச்சாத்திரம்தானும் யேசுநாதரை அறியாதவர்களில் இவ்வளவு குற்றத்திற்கு உரியதாகமாட்டார். யேசுநாதர் உண்டாக்கிய திருச்சபைவழிபாடெங்கே? ஞாயிற்றுக்கிழமையும, கடன்திருநாளும் எங்கே? திவ்விய பூசைப்பலியெங்கே? பச்சாத்தாபம் என்னும் யேசுவின் விசேஷ தேவதிரவிய அனுமானமெங்கே? சற்றுச் சிந்திப்போம்.

### நேரமில்லையாம்

மேலே சொன்ன குறிக்கப்பட்ட நாளிலே எப்படியென்றாலும் நேரம் கிடைக்கிறது. ஞாயிற்றுக் கிழமை ஒருபோதும் நேரமில்லை. மிகவும் முக்கியவேலை மத்தியிலும் ஒரு அரைமணி நேரம் கிடைக்கிறது. வேலை தொடங்க முன்னே சகலவேலைகள் முடிந்து முழுச்சமுதாயமும் இளைப்பாறுகிற நேரத்தில் தானும் நேரம் கிடைக்கிறதில்லை. பலமைல் தூரம் ஓடிப்போக நேரம் இருக்கிறது. வீட்டோடு இருக்கும் ஆலயத்தில் அதுவும் ஞாயிற்றுக்கிழமையில் நேரமில்லையாம், ஏன் மனம் இல்லை. யேசுவில் விசுவாசம் இல்லை, யேசுவின் வழிபாட்டுமுறையில் நம்பிக்கையில்லை. குருமாரின் பிரசங்கம் கசகசப்பாயிருக்கிறது. யேசுவின் போதனைகள் எடுத்து விளக்குவதைக் கேட்க விருப்பமில்லை.

### அர்ச்சியசிஷ்டர்கள் :

அர்ச்சியசிஷ்டர்கள் யேசுவின் மிகவும் பிரமாணிக்கமான சீடர்கள், எனவே திருச்சபை அவர்களுக்குச்செலுத்தும் வணக்கத்தைப் பாராட்டுகிறது. ஆனால், அர்ச்சியசிஷ்டர்களுக்கு மிகவும் துக்கத்தை வருவிக்கும் முறை நடக்கிறது. யேசுவுக்குரிய தேவஆராதனை அவரால் படைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு, மோட்சசம்பாவனை அளிக்கப்பட்டு வரும் யேசுவின் மிகவும் தாழ்மையான சீடரை முறை மாற்றிவைப்பது தான். நல்ல ஊழியனுக்குத் தனது எசமானின் இடமெடுக்க விருப்பமா? இல்லை. சூரியனிடமிருந்து வெளிச்சத்தைப்பெறும் சந்திரன் எப்பொழுதும் தன்னிடத்தில்தான் இருக்கும். யேசு மன்னிப்பார். அர்ச்சியசிஷ்டர்கள் இந்நிலைமையை விரும்பவேமாட்டார்கள்,

### மெழுகுதிரியா வேதம்?

யேசுவின் தேவதிரவிய அனுமானங்கள் ஒரு புறமிருக்க, ஒரு கட்டுமெழுகுதிரி எரித்து வேதக்காரராய் இருக்கலாமா? யேசு நற்கருணையை உண்டாக்கினார், யேசு பச்சாத்தாபத்தை உண்டாக்கினார். பாவமன்னிப்பைப் பெற்று தேவபோசனத்தால் சீவிப்பதே யேசு நிர்ணயித்த வேதம். நாம் நினைத்தபடி வழிபாடு செய்யலாமா? சகல வெளிச்சங்களையும் படைத்த தேவனுக்கு இருள்போக்கவா மெழுகுதிரி? அதற்கு அடையாள முறையில் ஒரு சிறு இடம் திருச்சபை அளிக்கிறது.

### அர்ச்சியசிஷ்டர்களுக்கு மெழுகுதிரி :

ஏன் மெழுகுதிரி? ஆம் யேசுவின் சீடன் யேசுவோடு அர்ச்சியசிஷ்டரைப்போல் பலியாகிறான். தன்னை முழுதும் யேசுவுக்குக் காணிக்கை வைக்கிறான், எப்படி தான் எரிக்கும் மெழுகுதிரி முற்றாக அழிந்து போகிறதோ அப்படியே தனது ஆத்துமமும், சரீரமும், அயலைத்தாலும் பாவவழிகளாலும் உந்தப்படாமல் தேவஅன்பால் ஆளப்பட வேணுமென்றே இச்சடங்கைச் செய்கிறான். யேசுவுக்கு ஆராதனை செய்யாதவர் எப்படி அர்ச்சியசிஷ்டர்களுக்கு வணக்கம் செய்யலாம்? யேசு மன்னிப்பார் ஆனல், இதை அர்ச்சியசிஷ்டர் விரும்பமாட்டார்,

### குருட்டுப்பத்தி :

கிறீஸ்துவை அறியாதவர்களை கிறீஸ்துவும் மன்னிப்பார். அர்ச்சியசிஷ்டரும் மன்னிப்பார். ஆனல், கிறீஸ்துவை அறிந்த நாங்கள் கிறீஸ்துகாட்டின முறையில் கடவுளை வழிபடுவோம், அவரே உலகத்தின் ஒளியாய் இருக்கிறார். அவரே கடவுளை வழிபடவும் அவருடைய வார்த்தைகளைப் போதிக்கவும் திருச்சபையை உண்டாக்கினார். அவர் தேவன். எனவே, அவர் மோட்சத்திற்குப் போகுமுன கடவுளின் இராட்சியம் இவ்வுலகில் வரவும் கடவுளின் மக்கள் உருவாகவும் ஞானவிதமாய்ப் போஷிக்கப்படவும் வேண்டியவழிகளை அமைத்தார். அர்ச்சியசிஷ்டர்கள் கிறீஸ்துவின் கனிகள். திருச்சபையால் உருவாக்கப்பட்ட கிறீஸ்துவின் சீஷர்கள்.

### மாட்டுக்கு முன் ஏன் வண்டி?

முறை ஒன்று இருக்கிறது. கடவுள் என்றும் கடவுள்தான். அவருடைய சித்தமும் அதேபோல்தான். அவரே என்றும் திராட்சைக்கொடி. நாம் எல்லோரும் அவரின் கிளைகள். அவரிடமிருந்தே சகலத்தையும் பெறுகிறோம். நாம் அவரிலும் அவர் நம்மிலும் வசிக்கும் பொழுதும் அவரே கடவுள், அவரே சகலத்தின் வல்லபமும், நன்மைத்தனமுமாய் இருக்கிறார். எப்படி மாடு வண்டிக்குமுன் போலோ அப்படியே நாமும் கடவுளால் உந்தப்படுவோம், கடவுளால்சீவிப்போம். அப்பொழுதான் நாம் புனிதரின் விசேஷ சகாயங்களைப்பெற பாத்திரவான்களாவோம், கடவுளுக்கு என்றும் ஆராதனை. புனிதர்களுக்கு என்றும் வணக்கம்,

## பரிசுத்தநாட்டு ஈஸ்ரர் யாத்திரிகர்கள்

பரிசுத்த நாட்டுக்கு வருடாவருடம் திருப்பாடுகளின் நாட்களில் பெருந்தொகையினராக கிறிஸ்தவர்களும் பிறரும் யாத்திரை செல்வதுண்டு. ஆனல், இம்முறை ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலுமிருந்து மிகக்குறைவாகவே யாத்திரிகர்கள் அங்கு சமுகம் அளித்தனர். இம்முறை முதன் முதலாக திருப்பாட்டு ஸ்தலங்களில் யூதஇனத்தவர்களின் அரசாங்கத்தின் பாதுகாவலின்கீழ் திருச்சடங்குகள் நடைபெற்றன. குறிப்பாக எகிப்து தேசத்திலிருந்து கிறிஸ்தவர்களோ பிறரோ அங்கு செல்லவில்லை எனக்கூறப்படுகின்றது.

## மரியாயின்சேனை ஸ்தாபகர்

அயரென அறியப்படும் சுதந்திர அயர்லாந்தின் தலைப்பட்டணமாகிய டபிளின்நகர்வாசியும், மரியாயின் சேனையை அடியிட்டவருமான திரு. பிராங் டவ் அவர்கள் சென்றபங்குனி மாதம் 28ஆம்திகதி வியாழக்கிழமை அயர்லாந்தின் தேசியசர்வகலாசாலையால் "எல்எல். டி" எனப்படும் சட்டக் கலாநிதிப் பட்டம் அளித்துக் கௌரவிக்கப் பெற்றிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்விபயிற்றும் திருச்சிலுவைக் கன்னியர் மடம்

## மென்சிஞ்ஜென் — சுவிற்சர்லாந்து

மாகாணம்: இலங்கை, நவகன்னியர் இல்லம், யாழ்ப்பாணம்.

பிறர் சிநேகத்துக்காகத் தமது சீவியத்தை அர்ப்பணஞ் செய்து, தேவனுக்கு ஒப்புக்கொடுக்கச் சருவேசுரனுல் அழைக்கப்படுவோர், உண்மையான சந்தோஷத்தை அனுபவிக்கிருர்கள். இந்த எண்ணத்தையே மனதிற் கொண்டு இச்சபை ஸ்தாபகரும், பிரான்சிஸ்கன்சபைக் குரவருமாகிய வணக்கத்துக்குரிய தியொடோசியஸ் புளொறென்டினி சுவாமியவர்கள், கல்விபயிற்றும் திருச்சிலுவைக் கன்னியாஸ்திரிமார் சபையை, 1844-ம் ஆண்டு, சுவிற்சர்லாந்து தேசத்திலுள்ள மென்சிஞ்ஜென் என்னும் இடத்தில் நிறுவினுர். இச்சபைக்கு 1901-ம் ஆண்டு தமது அங்கீகாரத்தைப் பரிசுத்த பாப்பரசர் அருளலானுர்.

சங்கைக்குரிய பேர்னுடோ ஹீம் காட்னர் தாயார் அவர்களே இச்சபையின் துணை ஸ்தாபகரும், சபையின் முதல் அதிபருமாவர். இவர் வீரமும், விடாமுயற்சியும், பரிசுத்தமும் உடையவர். இவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் அளிக்கும் முயற்சி தீவிரமாக முன்னேறி வருகின்றது.

### கன்னியாஸ்திரிமார் சபையின் நோக்கமும் வேலைகளும்

இச்சபையில் சேர்ந்துகொள்ளும் கன்னியாஸ்திரிமார் யாவரும் வறுமை, கற்பு, கீழ்ப்படிவு ஆகிய மூன்று வாக்குத் தத்தங்களால் தம்மைப் பரிசுத்தப்படுத்திக் கொள்வதே இச்சபையின் பிரதான நோக்கமாகும். இளைஞருக்குக் கல்வி பயிற்றுதல், ஆஸ்பத்திரிகளிலும், நோயாளர் வசிக்கும் மறு ஸ்தலங்களிலும் வியாதிஸ்தரைப் பராமரித்தல், கிழவயதினர் இல்லங்களை நடப்பித்தல். பாலர்களைத் தாலாட்டுதல், பெண்களின் விடுதிவீடுகளை நடப்பித்தல், குஷ்டரோகம், சயரோகம் முதலிய பயங்கர நோய்வாய்ப் பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்தல், தேவனது நேசத்துக்காக வேறு எவ்வித பிறர்சிநேகத் தொண்டுகளையும் கையேற்று நடத்துதல் முதலியனவே இக்கன்னியாஸ்திரிமார் சபையினரின் வேலைகளாகும். சுருங்கக்கூறின் தேவனது நேசத்துக்காகப் பிறர்சிநேகத் தொண்டுகளைச் செய்தலே இவர்களது வேலை.

அர்ச்சியசிஷ்ட பிரான்சீஸ் அசிசியின் முறைகளும், தன்மையுமே இச்சபையினரது ஒழுக்கத்தை வழிப்படுத்துகின்றன. இவர்கள் ஒன்று சேர்ந்து பரிசுத்த கன்னிமரியம்மாளுக்குரிய செபங்களை (Office of the Blessed Virgin Mary) ஓதுவார்கள். செபத்திலும், தியானத்திலும் அதிக நேரம் செலுத்துவது அவர்கள் முறையாகும்.

### கன்னியாஸ்திரிமாரின் பயிற்சி

சபையில் சேர்வதற்கு விரும்பும் இளம் கன்னியர்கள் சில மாதங்களைப் பரீட்சை நிலையில் (Probationers) செலவு செய்கின்றனர். அதன் பின்பு ஒரு வருடம் அபேட்சகர்களாகச் (Postulants) சீவிக்க வேண்டும். இது முடிந்ததும், "நவ கன்னியாஸ்திரிகள்" (Novitiate) காலம் தொடங்குகிறது. இது பயிற்சி அடர்ந்த காலம். இப்பருவத்தில் நவ கன்னியாஸ்திரிகள் விரும்பும் பதவிக்கு ஏற்றவர்களா, அல்லவா என்பது அவர்களுக்கும், அவர்களது ஆன்ம அதிகாரிகளுக்கும் புலப்படும். இக்காலம் முடிந்ததும் முதல் வாக்குத்தத்தங்கள் இவர்கள் கொடுக்கின்றனர். இவ்வாக்குத்தத்தத்தின்பின் கல்வி தொடர்ந்து நடைபெறும். சபையில் தேவைப்படும் வேலைகளுக்குக் கல்வி பொருத்தமானதாக வகுக்கப்படும். கன்னியாஸ்திரிகள் யாவரும் ஒரேவித ஆடை அணிவர். கடமைகளும், உரிமைகளும் சகலருக்கும் பொதுவானவையே. இவ்வாறு ஆறுவருட காலம் செலவு செய்தபின் இக்கன்னியாஸ்திரிகள் நித்திய வாக்குத்தத்தம் எடுத்துக் கொள்ளலாம்.

### பிரவேச சட்டங்கள்

ஆசிரியர் வேலையிலும், தாதி வேலையிலும், மருத்துவிச்சி வேலையிலும், தராதரப்பத்திரம் உடையவர்களுக்கு இச்சபையில் அவர்களது விருப்பத்திற்கு உகந்த வேலைகள் உண்டு. மறு அபேட்சகர்கள் பள்ளிக்கூட இறுதிப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களாய் இருக்க வேண்டும். உயர்தர பயிற்சிச்சாலைகளுக்கு அனுப்பப்பட்டுச் சபையில் தேவைப்படும் தொழில்களைக் கற்றுக்கொள்ள இவர்களுக்கு வசதிகள் உண்டு. மேலும், தகுந்த அழைத்தலும், நல்ல நோக்கமும் இருப்பதாகத் தோன்றின், மேற்கூறப்பட்ட பிரவேச தராதரப் பத்திரங்கள் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.

சேர விரும்புபவர் பின்வரும் பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அவை: பிறப்பு, ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், தேகசுகம், ஒழுக்கம் ஆதியனவைபற்றிய பத்திரங்கள்.

சபையின் சட்டங்களின்படி, இச்சபையில் சேர விண்ணப்பித்துக் கொள்பவர்கள் தங்கள் ஆத்தும ஈடேற்றத்துக்காக மேலும், மேலும் முயற்சி செய்ய உண்மையான விருப்பமுடையவர்களாகவும், அயலவருக்குத் தொண்டு செய்வதைத் தேவனுக்கே தொண்டு செய்வதாக நம்புகிறவர்களாகவும், இச்சபையில் உபயோகமான அங்கத்தவர்களாக இருக்க ஆசை உடையவர்களாகவும் இருக்க வேண்டும். இதற்கு ஓர் அளவு நல்ல தேக ஆரோக்கியமும், மனச்சுகமும், சந்தோஷமும், சாந்தமுமான குணமும், உண்மையான பக்தியும், பிறருக்கு உதவிசெய்யும் மனமும், நல்லெண்ணமும் அவசியம்.

### இலங்கையில் கன்னியாஸ்திரிமாரின் வேலைகள்

- கொழும்புத்துறையிலுள்ள அர்ச். சூசையப்பர் வயோதிபர் மடம் இவர்களது பராமரிப்பில் இருக்கின்றது.
- யாழ்ப்பாணம் குருநகரில் அமைக்கப்பட்டிருக்கும் பாலர் பகற்காலத் தாலாட்டுச்சாலைப் (Creche) பொறுப்பு இவர்களுடையது.
- குருநகரில் இருக்கும் கட்டு வைத்தியசாலையிலும், பொதுநல சேவை நிலையத்திலும் இக்கன்னியாஸ்திரிமார் வேலைசெய்து வருகின்றனர். இப்பகுதிகளிலுள்ள வீடுகளைத் தரிசித்து, சமயபோதனை ஊட்டி வருவதிலும் இவர்கள் தமதுகவனத்தைச் செலுத்துகின்றனர்.
- கொழும்பு நகரில் ஒரு நோயாளர் இல்லத்தின் பராமரிப்பின் பொறுப்பையும், மாணவிகள் விடுதிச்சாலை நடப்பித்தலின் பொறுப்பையும் ஏற்று நடப்பித்து வருகின்றனர்.
- நுவரெலியாவில் இக்கன்னியாஸ்திரிமாரின் சுகநிலையம் ஒன்றை நடப்பிப்ப[illegible] வரும் வி[illegible]க்கும்,

இளைப்பாற விரும்பும் பெண்மணிகளுக்கும் வேண்டிய வசதிகள் அளித்துத் தொண்டு செய்தும் வருகின்றனர்.

விண்ணப்பங்கள் அனுப்பும் முகவரி:
சங். சிரேஷ்ட தாயார்,
திருச்சிலுவைக் கன்னியர் மடம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

# மே தினம்

R. அந்தோனி

**1. மே தினத்தின் உற்பத்தி:**

சற்றேறக்குறைய எண்பத்திரண்டு வருடங்களுக்குமுன் அமெரிக்க தொழிலாளர் தங்கள் உரிமைகளுக்காகப் போர்புரிந்தனர். நாள்முழுவதுமே முதலாளிமார்களுக்காக உழைத்தும் தாம்கண்ட பயன் வெற்றுக்கையே என்பதை உணர்ந்த தொழிலாளர் தம்உரிமைகளுக்காகப் போராடினர். நாளுக்கு எட்டு மணித்தியாலங்களே வேலை செய்வது என்று பிடிவாதமாய் நின்ற அவர்கள் 1886-ம் ஆண்டிலே மே மாதத்திலே இந்த உரிமையைப் பெற்றுர்கள். அந்நாள் தொடக்கம் மே மாதத்தின் முதல்நாள் மே தினம் என்று கொண்டாடப்பட்டு வருகின்றது.

**2. மே தினத்தின் நோக்கம்:**

i. தொழிலாளர்கள் ஒன்றுகூடி தங்கள் உரிமைகளுக்காகப் போராடுதல்.

ii. தங்கள் தொழில் துறைகளில் எழும்பும் பிரச்சினைகளைத் தங்களுடைய பரித்தியாகத்தாலும், பிறர்சிநேக முறைகளாலும், தாங்களே முடிவு செய்துகொள்வது.

iii. தங்களுடைய சொந்த நலனுக்காகவும்; தங்கள் சமுதாயத்தின் உயர்வுக்காகவும்; தங்கள் தேசத்தின் நலனுக்காகவும் உழைப்பது.

**3. கிறிஸ்துவ தொழிலாளியின் கடமைகள்:**

i கிறிஸ்துவ தொழிலாளியானவன் மேலே சொல்லப்பட்ட உன்னத நோக்கத்தை நிறைவேற்ற தன்னுல் கூடிய அளவிற்கு முயற்சி செய்யவேண்டும்.

ii. சுயநலத்தை மட்டும் கருதாது பொது நலத்தைக் கருத வேண்டும்.

iii. தன் உடன்-தொழிலாளிகள் தன்னைப் போலவே சர்வேசுரனுல் உண்டாக்கப்பட்டவர்களென்றும், அவர்களுக்கும் அடிப்படை மனித உரிமைகள் உண்டென்பதையும் அவன் உணரவேண்டும்.

iv. ஆகவே, அவர்களின் பொருளாதார உயர்வை, சீர்திருத்தத்தை அவன் விரும்ப வேண்டும்.

v. ஆனுல், அத்துடன் நில்லாது அவனுடைய ஆர்வம் உயரவேண்டும். அதாவது, அவனும் அவனுடைய உடன் தொழிலாளிகளும் ஆத்தும - சரீரமுடைய மனிதர்களெனவும், சர்வேசுரனுல் அவ்வவ் தொழிலிலே வைக்கப்பட்ட தேவபுத்திரர்களெனவும் அவனும் அவர்களும் உணர்ந்து, அந்தமகத்தான அந்தஸ்திற்கு கௌரவத்தை உண்டு பண்ண அவன் முயலவேண்டும். இதற்கு பங்கம் விளைவிக்கும் காரணங்களை அவன் அகற்ற வேண்டும்.

vi. தொழிலாளியானவன் சர்வேசுரன் தனக்குக் கொடுத்துள்ள திறமைகளை அவைகளின் சம்பூரணத்திற்கு உபயோகிக்க வேண்டும்.

vii தனது திறமைகளைச் சம்பூரணமாய்ப் பிரயோகித்து உண்மையாகவே உழைத்து, தன் உழைப்பின் பயனாக மனிதரிடம் பசி, பட்டினி, பயம், வறுமையென்னும் உபத்திரவங்கள் வராவண்ணம் பிரயாசைப்படல் வேண்டும்.

viii இறுதியாகதொழிலாளியானவன் தனது மனித த்தன்மைக்கு பங்கம் விளைக்கும் காரணங்களைத் தடுத்து தொழிலின் உயர்வையும் அதன் பிரயோசனத்தையும் அடையவேண்டும்.

**4.** "தொழிலானது தொழிலாளியின் சொந்த முன்னேற்றத்திற்கும், சமுதாயத்தின் உயர்வுக்கும் நாட்டின் நலனுக்கும் ஒரு சிறந்த வழி," தொழிலின் வழியாக மனிதன் தன் அறிவை, புத்தியை, ஊக்கத்தை, உடம்பை முன்னேறச் செய்கின்றுன். இவ்வழியாக அவன் தனக்கும், சமுதாயத்திற்கும், ஊருக்கும் நன்மை செய்கின்றுன்.

**5.** இலங்கையில் தற்போதுள்ள சில தொழிற் குறைகளைச் சற்றே ஆராய்வோம்: அவை:—

i. வேலையில்லாத் திண்டாட்டம்.

ii. வேலை பயிலுதல் என்றே வாழ்நாளெல்லாம் கட்டுப்பட்டிருக்கும் பெரும் பாலோர்.

iii. குறைந்த சம்பளம்.

iv. சுகாதார வசதியின்மை.

v. எதிர்கால நிச்சயமின்மை என்பவையாம். இவைகளின் பயனாக விளையும் கேடுகள் ஆவன:-

பசி-பட்டினி, வியாதி, ஆத்தும கேடு, இவைகள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாக இருக்கின்றன.

**6.** இக்காரணங்களால் தொழிலாளி, குடி, சூதாட்டம், கடன், கைலஞ்சம்

[தொடர்ச்சி மறுபக்கம் பார்க்கவும்]


● ஹாவத்தை

## மலையக மகளிரின் மாண்பு

சூரியோதயத்துடன் எழுந்து, அஸ்தமனம்வரை நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கும் பெண்களின் வாழ்வில் மகத்தான மூன்று நாட்கள். ஆம்! அதுதான் சித்திரைத்திங்கள் 10-ம் திகதிமுதல் 13-ம் திகதிவரை அர்ச். அன்னம்மாள் ஆலயத்தில் நடைபெற்ற ஞானஒடுக்கம். கூடியிருந்த இளம்பெண்கள் — கல்லூரியில் படிக்கும் பெண்களல்ல— நாளொரு வண்ணம் பொழுதொரு சேலை உடுத்தும் நாரீமணிகளல்ல. தேயிலைக் கொழுந்தெடுக்கும், றபர்ப் பால் சேகரிக்கும் மாதர்கள்.

சுமார் அறுபது பெண்கள் கூடினர் அன்று. சங். குரு. யோசப்மேரியின் தலைமையில் தொடங்கிய இஞ்ஞான ஒடுக்கம் சங். கன்னியாஸ்திரி கேற்றனின் மேற்பார்வையுடன் இனிது நிறைவேறியது. அன்பரின் அமைதியில் இன்பமாய்க் கழிந்தன இம்மூன்று நாட்களும் எனக் கூறினர் அனைவரும். இப்பெண்கள் அனைவரும் தங்கள் ஆன்ம முன்னேற்றத்திற்காக அளித்த ஊக்கம் சொல்லும்தரமன்று. சரீர கஷ்டத்தைப் பாராது, தொழில் முறைகள் வீடுவாசல்களைப் பாராது, ஏன் நாளாந்தம் கிடைக்கும் சொற்ப கூலியைக்கூடத் துறந்து, ஞானஒடுக்கம் செய்யப்புகுந்த இவர்களின் இதய அன்பை என்னவென்று எடுத்துரைப்பது. ஞானஒடுக்கத்தின் கடைசி நாளன்று பெண்கள் அனைவரும் சேர்ந்து ஒரு சங்கமொன்று அமைத்தனர். தலைவியின் தலைமையில் தாங்கள் அனைவரும் தேவதாய்க்கு உகந்த பிள்ளைகளாக நடப்போமென்றும் சிறு பிள்ளைகளுக்கு விசேஷ உதவிகள் செய்து வருவோமென்றும் வாக்களித்தனர். பின் பங்குச் சுவாமியாரின் ஆசீருடன் இனிதே வீடு சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அன்புள்ள தம்பி, தங்கையரே!

"மேதினம்," "தொழிலாளர் தினம்" என்ற நாமங்களுடன் உலககர கோஷங்களும், ஆர்ப்பரிப்புகளும் மிக்கதாய் வைகாசிமாதம் உதித்தது. அம்மாதத்தின் முதல்தினத்தைத் தொழிலாளர்களின் மாதிரிகையாகிய அர்ச். சூசையப்பரின் தினமாகத் திருச்சபை ஞாபகப்படுத்தியது. ஆனால், மே மாதமோ தேவதாயாரின் வணக்கமாதமன்றோ!

மனுஷாவதாரமெடுத்த சுதனாகிய சருவேசுரனின் தாயே மரியாய். அவருடைய இரத்தம் அவவினது இரத்தம்; அவருடைய சரீரம் அவவினது சரீரம்; தேவதாய் சருவேசுரனுடைய தாயாயிருக்கிறதினாலே அவவுக்குக் கிடைத்த மகிமை ஒருவிதத்தில் அளவற்றது, சருவேசுரன் இவ்வுலகை விட வேறோர் மேலான உலகை உண்டாக்கலாம்; அதிக மேலான மோட்சத்தை உண்டாக்கலாம். ஆனால், கடவுளின் தாயாரைப்பார்க்க உயர்ந்த தாயாரைச் சிருஷ்டிக்க முடியாது. இத்தாயார்க்குக் கிடைத்த சகல வரங்களுக்கும், சலுகைகளுக்கும் அடிப்படை இதுதான்.— அவ கடவுளின் தாய். மாசில்லாமல் உற்பவித்தவ இத்தாயார்; கன்னிமை என்றும் கெடாதவ இப்புண்ணியவதி; சரீரம் அழியாவரம் பெற்றவ இவ்நிர்மலி; சரீரத்துடன் மோட்சத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டவ இத்தாயார். அங்கிருந்து கொண்டு தன் உதரக் கனியானவரிடம் எமக்காகப் பரிந்துபேசுகிறா.

இம்மாதம் எமக்கோர் சந்தோஷம்தரும் மாதமாயிருக்க வேண்டியதன்றோ! பாமாலையாலும், பூமாலையாலும் மனுமக்கள் தங்களின் தாயாரை எங்கும் வாழ்த்துகிறார்கள். விசேஷமாய் நாளாந்த திவ்வியபூசையிலும், சாயந்தர வணக்கமாத ஆராதனைகளிலும் ஆசையுடன் நீங்களும் பங்கு பற்றலாம்.

— அண்ணா



# சிரியுங்கள்!

அண்ணன்: நாம் ஒவ்வொரு வருடமும் குருத்துஞாயிறுக்குச் சென்று குருத்தோலை பெற்று வருகின்றோமோ இதன் அறிகுறி என்னவென்று தெரியுமா?

தங்கை: என்ன இதா எனக்குத் தெரியாது அண்ணா?

அண்ணன்: எங்கே தெரிந்தால் கூறு பார்க்கலாம்.

தங்கை: "ஒரு சமயம் பெருந்திரளான மக்கள் யேசுநாதர் சுவாமியின் பிரசங்கத்தைக் கேட்க அதிதூரதேசங்களிலிருந்து வந்திருந்தார்கள். பிரசங்கித்து முடிந்தபின்னர் அவர் தமது அப்போஸ்தலர்களை நோக்கி இவர்கள் அதி தொலைவில் இருந்து வந்திருக்கின்றபடியால் இவர்களைப் பசியாக அனுப்பிவிட மனதில்லாதவனாக இருக்கின்றேன். நீங்களே இவர்கட்கு ஆகாரந்தேடிக் கொடுங்கள்" என்று கூறினார்...

அண்ணன்: இதற்கும் குருத்து ஞாயிறுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையே.

தங்கை: பொறு அண்ணா நான் இன்னும் முடிக்கவில்லையே ... அப்பொழுது சீமோன் இராயப்பர் மறுமொழியாக: "நல்ல குருவே உமக்குச் சித்தமானால் நாங்கள் பக்கத்தில் இருக்கின்ற தென்னை மரங்களில் ஏறி இவர்கட்கு இளநீர் பறித்துக் கொடுக்கின்றோம்." அப்பொழுது யேசுநாதர்: "இராயப்பா மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கின்றதே, எல்லோருக்கும் எவ்விதம் இளநீர் பறித்துக் கொடுப்பது' என்று கூறியவுடன், இராயப்பர்: "சுவாமி மிகுதியானோருக்குத் தென்னை ஓலையைமட்டும்கொடுத்து ஒருவாறு சமாளித்து அனுப்பிவிடுவோம்" என்று தான் சொல்லுவது என்னவென்று அறியாமல் வாய் பிதற்றினார். அதன் அறிகுறியாகவே இப்பொழுதும் நாம் குருத்து ஞாயிறுக்குச்சென்று குருத்தோலை பெற்று வருகின்றோம்.

அண்ணன்: அடே அப்பா, ஞானோபதேசத்தில் நீ புலியாக இருக்கின்றாயே. இம்முறை ஞானோபதேசப் போட்டிப்பரீட்சையில் நிச்சயமாக உனக்கே முதற்பரிசு கிடைக்கும்.

தயாரிப்பு: ஐ. வின்சென்ற் டலிமா.

## ஏன்?

நல்லபாம்பு தலை தூக்குவதேன்?
நாம் புகைப்பட கருவிமுன் நிற்பதேன்?
படமெடுக்க.

* * *

பையன் அழுவதேன்?
பந்து எழும்புவதேன்?
அடிப்பதால்

* * *

காடு குறைவதேன்?
கால்வாய் நீள்வதேன்?
வெட்டுவதால்

* * *

ஆல் இலை பழுப்பதேன்?
ஆவின் கன்று சாவதேன்?
பாலில்லாமல்

---

உலகம் வேண்டுவது ஒழுக்கம்
தன்னலம் உற்றது தீய ஒழுக்கம்
தன்னலம் அற்றது நல்லொழுக்கம்

—விவேகானந்தர்

## 3 டாலர்

இருபது ஆண்டுகளுக்குக் முன்னர் 5,000 பேர்கள் நியூயோர்க் பட்டினத்திலுள்ள ஒரு கடையை நோக்கிப் படையெடுத்துச் சென்றனர். ஓர் அதிசயமான மையூற்றுப் பேனா ஒன்று மூன்று டாலருக்கு விற்கப்பட்டதுதான் இவர்கள் அடித்துவிழுந்து அங்குசென்று பார்ப்பதற்குக் காரணமாயிருந்தது. அப்பேனாவினால் தண்ணீருக்குள்ளேயும் எழுதலாம். அதுதான் நாம் இப்போது பாவித்து வரும் போல்பொயின்ற் பென்.

---

காட்டுயானைகள்பற்றி ஆராய்ச்சி நடத்தி அவற்றைப் பாதுகாக்கும் நடவடிக்கை எடுத்துவரும் சிமித்ரோனியென்ற ஒருஸ்தாபனம் வாஷிங்ரன் நகரில் இருக்கிறது. ஆராய்ச்சி நடத்துமுன் அவற்றின் முரட்டுக் குணத்தைத் தற்காலிகமாகத் தணிக்குமுகமாக அது கண்டு பிடித்திருக்கும் மருந்து ஒருவிதஊசிமூலம் சுடப்பட்டு அவைகளைச் சாந்திபண்ணிவருகின்றது.

# கவலைப்படாதே!

அன்பிற்குரிய நண்ப!

நீர் எனக்கு எழுதிய கடிதத்திலிருந்து உம்முடைய தந்தையின் பிரிவையுற்று நீர் கவலைக்கடலில் மூழ்கியிருப்பதாக எண்ணுகிறேன்.

நண்ப, கடந்த துன்பத்தை எண்ணிக் கவலைப்படாதீர். உமக்கு வருங்காலத்தில் நடக்கப்போகும் இன்பச் செயல்களை எண்ணி மகிழ்ச்சியடையும். ஒரு கண்ணாடியின்முன் நீர் கவலையுடன் தோன்றினால் அக் கண்ணாடியும் கவலையுடனேயே உம்மைப் பார்க்கும். சந்தோஷமாகப் பார்வை செய்வீரானால் அக்கண்ணாடியும் சந்தோஷமாகப் பார்க்கும்.

நண்ப, நாம் எக்காரியத்தில் ஈடுபட்டாலும் துன்பம், துயரம், கவலை நம்மை வெற்றியிலிருந்து வெகு தூரத்தில் அப்புறப்படுத்துகின்றன. மகிழ்ச்சியுடையவன் வெற்றியை இலகுவில் காண்கிறான்: உம்முடைய முகத்தில் சந்தோஷம் என்னும் தேனை வையும்: மக்களாகிய வண்டுகள் உம்மைத் தேடிவரும். யாவரையும் புன்முறுவலுடன் அணுகும் காந்தியின் மோகனப் புன்னகையில் எவ்வளவுபேர் மகிழ்ச்சியடைந்தார்கள்?

எந்தக் காரியத்தையும் நீரே தீர்மானித்துக் கொள்ளும். எதற்கும் பயப்படாதீர். நீரே உம்விதியைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். தோல்வியடைவது கேவலமன்று: தோல்வி ஏற்படுமோஎன்று பயந்து ஒன்றுஞ் செய்யாதிருப்பது கேவலமுமன்றிப் பெருங் குற்றமுமாகும்.

"ஒரு முடிவிற்கு வந்துவிட்டால் அதை நிறைவேற்றுவதே உம்முடைய நோக்கமாக இருக்கவேண்டும். பலனைப்பற்றிய கவலையை நம் மனதை விட்டு அப்புறப்படுத்தி விடவேண்டும்." இது வில்லியம் ஜேம்சின் வாக்கு. கடும் மழையிலும் கோரக் காற்றிலும் அசையாதுநிற்கும் ஒரு பெரியமரத்தைப் பூச்சிகள் அரித்து விழுத்தி விடுகின்றன. அதேபோல அற்பவிடயங்கள் நம் வாழ்க்கையை விழுத்தி விடுகின்றன. அவ்விடயங்களை மறந்துவிடும். பிறர் எம்மைப் பற்றி என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும், என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும். அதைப்பற்றிக் கவலைப்படாதீர். உலகில் எல்லோரையும் திருப்திசெய்ய முடியாது. உம்மனதிற்கு எதுசரியெனத் தோன்றுகிறதோ அதைச் செய்யும். பிறரின் எண்ணத்தைக் கவனிக்காதீர்.

நண்ப, கஷ்டங்களின் குழந்தைதான் வெற்றிஎன்பதை அறிந்து கொள்: பொறுமையில்லாத தன்மையே மக்களைத் துன்பக்கடலில் வீழ்த்துகிறது. உலகத்தின் ஆணிவேரைப் பிடித்து அசைத்த — உலுக்கிய நெப்போலியன் சேனையில்சேர ஏழு ஆண்டுகள் எடுத்தன. பொறுமையை மேற்கொண்டதின் பயனாக வெற்றி கிடைத்தது.

"மேன்மையுற ஒரேவழி கடினமாக உழைப்பதுதான்" சிட்னி சிமித். நாம் உழைப்பதில்லை — கவலைப்படுகிறோம். தோல்வி ஏற்படுமோஎன்றுஎண்ணி எடுத்த காரியத்தைக் கைவிடுகிறோம். இது வெறுங்களின் செய்கைஎன அறைகூவினார், அகில உலகத்தையும் அன்புக் கண்ணால் நோக்கிய அன்பர் மகாத்மா காந்தி.

தந்தை இறந்துவிட்டார்: தாயாரோ நோயாளி, தங்கையோ வாலிப வயதடைந்தவர், தம்பியோ பாலகன், நானோமாணவன். எப்படியான் இவர்களைக் காப்பாற்றுவேன் என்று எண்ணி உம்மனதில் கவலையை உண்டுபண்ணாதீர். நம்பிக்கையுடன் முன்னேறும். ஈசனை மறவாதீர். மகாத்மாகாந்தி தன் சுயசரித்திரத்தில், "இதுகாறும் நான் அடைந்த தோல்விகட்குக் காரணம் நான் என் மீதுநம்பிக்கைகொள்ளாததும் ஆண்டவன் அருளில் அவநம்பிக்கை கொண்டதும்தான்" என்று கூறியுள்ளார். ஆதலால் உம்மீது நம்பிக்கை கொள்ளும். எதற்கும் விசாரப்படாதேயும். ஒன்றுக்கும் பயப்படாதேயும். பயம் என்றால் என்ன? எதற்காக நீர் பயப்படுகிறீர்? ஏன் பயப்படுகிறீர்? பயப்படுவதால் எவருக்காகிலும் நன்மை ஏற்படுமா? உற்சாகமாக இரும்; இன்னும் ஒருவாரத்தில் உவ்விடம் வருவேன்.

அன்புள்ள நண்பன்,
வே. யோகநாதன்.

## மூளைக்கு வேலை

| | | |
|---|---|---|
| 14 | 32 | 42 |
| 22 | 36 | 44 |
| 24. | 40 | 46 |

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

இது மூளைக்கு வேலைதரும் சாதாரண கணக்கு. மேலே 9 எண்களும், 9 சிறு சதுரங்களும் தரப்பட்டுள்ளன. ஓர் எண்ணை ஒருமுறைக்கு மேல் எழுதாமல் ஒவ்வோர் எண்ணாக எழுதி எப்பக்கம் கூட்டினாலும் 100 வரும்படி செய்யுங்கள்.

(விடை அடுத்த இதழில்)

## எண் + எண் = பழம்

இரண்டு எண்களுள் ஒன்று பெரியது; மற்றொன்று சிறியது. அவைகளைப் பெருக்கினால் 30வரும்; கழித்தால் ஒன்று மீதிவரும்; இரண்டையும் சேர்த்தால் ஒரு பழம் கிடைக்கும். அந்தஎண்ணைக் கண்டுபிடியுங்கள்.

விடை:
[6, 5 (ஆறு+ஐந்து) = ஆரஞ்சு]

## மே தினம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற சிக்கல்களில் ஈடுபட்டு அவனுடைய சுயமரியாதையை இழக்கின்றான்.

7. ஆகவே, அவனை உயர்த்தும் முன்னேற்ற மன்றங்களில், தொழிற் சங்கங்களில் அவன் அங்கத்துவம்பெற வேண்டியது அவசியம்.

8. தொழில் மனிதனை உயர்த்தும் வழி; அதை மனச்சாட்சிக்கு விரோதமின்றி சர்வேசுரனுடைய மகிமைக்காகவும், ஆத்தும நலனுக்காகவும் செய்யும்போது சர்வேசுரன் நமது தொழிலையும், தொழிலாளியான எம்மையும் ஆசீர்வதிப்பாரென்பதற்கு ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பெண்மணி

சென்ற சிலவருடங்களாக லண்டனிலே டிறவல்கார் சதுக்கத்தில் பெரியவெள்ளிக்கிழமையன்று பலகிறிஸ்தவ சபைத்தலைவர்கள் சமுகத்தில் ஒரு குறிப்பட்ட திருப்பாடுகளின் சடங்கு நடந்துவந்தது. அச்சடங்கில் கிறிஸ்தவ சபைகளுக்குச் சேர்ந்த குருமாரே பிரசங்கங்கள் செய்தனர். ஆனுல் இம்முறை கத்தோலிக்கரின் சார்பில் செய்யப்பட்ட உருக்கமான பிரசங்கம் ஒரு பெண்மணியினுல் செய்யப்பட்டது. அவர் 28 வயதுநிரம்பிய திருமதி பேர்னடீன் பிஷப் என்பவரே. சமுகமளித்த சமயத்தலேவர்களில் கருதினுல் ஹீனனும் அங்கிளிக்கன் சபை லண்டன் மேற்றிராணியாராகிய ஸ்ராபட் அடிகளாரும் விசேஷ பங்கு எடுத்துக்கொண்டனர்.

## வத்திக்கான் வானெலியில் துடிப்பான பாட்டுக்கள்

வத்திக்கான் வானெலி 37 வருட நிறைவுபெற்றுவிட்டது. இவ்வளவு காலமும் அதில் துடிப்பான பாட்டுக்கள் ஒலிபரப்பப்பட்டதில்லே: ஆன்ம கருமங்களுக்கு உகந்ததெனக் கருதப்பட்ட போக்கிலேயே பாட்டுக்களும் சங்கீதங்களும் ஒலிபரப்பப்பட்டன. ஆனுல் இம்முறைக்கும் முடிவுவந்துவிட்டதுபோலும். சென்றவாரம் நடைபெற்ற ஓர் அரைமணிநேர நிகழ்ச்சியில் பெரும்பாலும் துடிப்பான இராகங்களில் ஆன்ம கருமங்களுடன் சம்பந்தப்பட்ட பாட்டுகள் ஒலிபரப்பப்பட்டது பலருக்கு மகிழ்ச்சியை ஊட்டிற்று.

## 100 பேர் 120 மைல்களுக்கு குருசு சுமந்து சென்றனர்

இங்கிலாந்தில் கத்தோலிக்கர், அங்கிளிக்கன் ஆகிய ஒரு பக்திச்சபை வாலிபபெண்களும் ஆண்களுமாக சுமார் 100 பேர் வல்சிங்காம் என்னும் பெயர்பெற்ற புண்ணிய தலத்துக்கு நாட்டின் நாலு திசைகளிலுமிருந்து பாரமான மரக்குருசுகளேக் காவிக்கொண்டு 120 மைல் தூரத்துக்குச் சென்ற உருக்கமான காட்சி அதைக்கண்ட யாவரது உள்ளத்தையும் தட்டி எழுப்பியிருக்கின்றது. இது சென்ற தபசுகால வாரத்தில் இங்கிலாந்தில் நடைபெற்ற பக்தி முயற்சிகளில் ஒன்று. தபசுகால வார ஆரம்பத்தில் தொடங்கி, போகும் வழியில் சிலகோவில்களிலும் பள்ளிக்கூடங்களிலும் தங்கி ஒய்வு பெற்றுக்கொண்டும் அப்பகுதி மக்களுடன் வழிபாட்டில் கலந்துகொண்டும் பெரிய வெள்ளிக்கிழமையன்று வல்சிங்காம் புண்ணிய தலத்தை அடைந்தனர்.

## கத்தோலிக்க இலக்கியப் பரிசு

பிரான்சு தேசத்தைச் சேர்ந்த யேசுசபைக் குருவானவர் ஹென்றி டி லுபக் என்பவருக்கு அவர் இதுவரை எழுதிய 30 நூல்களின் திறமைக்காக அதி சிறந்த கத்தோலிக்க இலக்கியப் பரிசு அளிக்கப்பட்டிருக்கின்றது. இவர் ஆரம்பகாலத்தில் எழுதிய சில நூல்கள் புரட்சித்தன்மை உடையனவாய் இருந்ததெனக் கருதி அதிகாரிகள் அவரில் விழிப்பாய் இருந்தனர், ஆனுல் காலம் போகப்போக அவர் கூறியவற்றின் உண்மைகளேச் சகலரும் கண்திறந்து கண்டுகொண்டனர்.

## பஸ் ஊழியருக்கு எச்சரிக்கை

வடமாகாணத்திலுள்ள — முக்கியமாக யாழ்ப்பாணக்குடாநாட்டிள்ள போக்குவரத்துச்சபைடிப்போக்களிலும்,ஏனைய சிறு டிப்போக்களிலும் பஸ்ஊழியர்களான கண்டக்றர்களும், பிறரும் பொதுமக்களுடன் கண்ணியமாகவும் மரியாயாதையாகவும் நடந்துகொள்ளாவிடின் கடும்தண்டனே விதிக்கப்படுவார்களென்றும், அவர்களிலே நிரந்தரசேவையில் உள்ளவர்களேத் தண்டிக்குமுகமாகத் தூரமான பலவிடங்களுக்கு அவர்கள் மாற்றப் படுவார்களென்றும் போக்குவரத்துச் சபைத்தலேவர் ஓர்எச்சரிக்கை விடுத்திருக்கின்ருர். இலங்கையின் ஏனைய பகுதிகளிலும்பார்க்க யாழ்ப்பாண்க் குடாநாட்டிலிருந்தே அவர்களேப்பற்றி அதிகமான முறையீடுகள் செய்யப்பட்டுள்ளனவாம்.

## கட்டுப்படுத்தப்பட்ட பிரதேசங்கள்

முல்லேத்தீவிற்கு வடக்கேயுள்ள சுண்டிக்குளம்தொட்டுக் கரையோரமாகக் கோவிலம்முனே வரையிலுள்ள 15மைல் அகலமும், 60மைல் நீளமுமான பிரதேசமுழுவதும் இம்மாதம் 10ஆம் திகதிமுதல் கட்டுப்படுத்தப்பட்ட பிரதேசமாக்கப்படும். அப்பொழுது அங்கு சிலகுறிக்கப்பட்ட பொருட்கள் குறிக்கப்பட்டதொகைக்குமேல் பேர்மிற்இல்லாது எவரும் வைத்திருக்க முடியாது. அவற்றிலே அரிசி, பால்மா, தேங்காயெண்ணெய், பாக்கு, ரோச்லேற், மணிக்கூடுகள், சேலேயாகிய கள்ளக்கடத்தல் பொருட்கள் அடங்கியுள்ளன. கள்ளக்கடத்தலே முறியடிக்குமுகமாக அரசாங்கம் செய்திருக்கும் இச்சட்டவிதியை மீறுகிறவர்கள் தண்டனேக்குள்ளாவார்கள்.

---

● ஆபிரிக்காவிலே ரூடேசியநாட்டில் தொண்டாற்றிவரும் வைத்திய மிஷனரிமாருக்கு அமெரிக்கன்மிஷன் டக்றர்மார்சங்கம ஆகாயவிமானம் ஒன்றை அன்பளிப்புச்செய்திருக்கிறது. இது அங்நாட்டிலுள்ள கத்தோலிக்க மிஷனரிமாரினதும், புரொட்டஸ்தாந்த மிஷனரிமாரினதும் பொதுப்பாவனேயில் இருந்துவரும். இதனேச்செலுத்துகிறவர்கள் இருஅமெரிக்க புரொட்டஸ்தாந்தரே.

● சீரியநாட்டில் சனத்தொகை அதிகரிக்குமாறு 5முதல் 16பிள்ளேகளேக்கொண்ட குடும்பங்களுக்கு அரசாங்கம் விருதுகள் சன்மானித்து வருகின்றது. சென்ற 1967 ஆம்ஆண்டு இந்தவிருதுகள்பெற்ற குடும்பங்களின் தொகை 74ஆயிரம். இக்குடும்பங்களேச் சேர்ந்த பிள்ளேகளுக்கு இலவச கல்வியும், இலவசபிரயாணவசதியும் அளிக்கப்படுகின்றன.

● இந்தியாவிலே இராஜஸ்தானேச் சேர்ந்த பிக்கானரில் மக்கள் எலிகளே வழிபட்டுவருகிருர்கள். இந்தஎலிகளுக்கெனத் தினமும் 110ருத்தல்உணவுத் தானியங்கள் வழங்கப்படுகின்றன. அதனுல் இவ்வருடத்தில் சுமார்90 லட்சம்தொன் தானியங்கள் அவைகளே அழிவுசெய்யும் இந்தப்பிரயாணிகளுக்கு இரையாகிவிடுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

● செவ்வாய்க் கிரகத்திலே சப்பாத்துக்கள்ளிபோன்ற தாவரங்கள் இருப்பதாகவும், அக்கிரகத்தின் இருண்ட பகுதியிலேயே அவைகள் காணப்படுவதாகவும் சோவியற் வானவியல் ஆராய்ச்சிவிஞ்ஞானிகள் கண்டுபிடித்திருப்பதாக மஸ்கோவிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

● லண்டன்நகரிலே பிரபல பிரித்தானிய கம்பெனிஒன்று பேசும்கடிகாரம்ஒன்றை உருவாக்கியிருக்கிறது. இது நேரகாலத்தைத் தெரிவித்து மணிக்கு ஒருதடவையாக நாளொன்றுக்கு 24தடவை பேசுகின்றது. இது காந்தசக்திமூலமே இயங்குகின்றது.

# ஒன்றே மந்தை—ஒருவனே மேய்ப்பன்

— ஆசிநாதர் —

பரிசேயர் தமைநோக்கிப் பரமன் யேசு
பகர்ந்ததொரு பரிவுரையைப் படித்தறிந்தால்
நரதேவன் நம்மீது நயந்து வைக்கும்
நல்லன்பை நாமறிந்து மகிழ்வுகொள்வோம்
எரிவிளக்காய் எம்வாழ்வு எழிலே கொள்ளும்
எப்பயமும் எத்துயரும் அடுக்காதாகும்
திருவாக்குத் தப்பாது உலகி லென்றும்
திருமறையும் பெருமறையாய்ப் பொலியுந்தானே

நானிலத்தின் நல்லாயன் நானே, நானே
நன்கறிவேன் ஆடுகளே நாளும்நானே
நானீவேன் என்னுயிரை மந்தைக் காக
நல்மந்தை எனையறிந்தென் குரலும்கேட்கும்
தான்கூலி பெறவருமோர் வேலே யாளோ
தக்கதொரு தருணத்தில் ஓடிச்செல்வான்
ஊன்விரும்பும் ஓநாயைக் காணும் போதே
உயிருக்காய் ஓடிப்போய் ஒளிந்துகொள்வான்

சொந்தமென்ற எண்ணமின்றிக் கூலிக் காகச்
செய்கின்ற செயலெதுவும் செம்மையாமோ ?
தந்தையைநான் அறிவதுபோல் கிடையும் எண்ணும்
தயங்காது மேய்ச்சல்நிலம் வந்துகூடும்
இந்தமந்தை சேராத ஆடு முண்டு
எப்படியும் இவைஒன்று சேரவேண்டும்
வந்துவிடும் ஒருமந்தை ஓரே ஆயன்
வாய்க்குமொரு தனிமேய்ப்பு என்ருர்யேசு

பெருமுலகின் திருமேய்ப்பர் யேசு நாதர்
பெருமறையின் பேராயர் பாப்புவாகும்
குருக்களுமே கண்கண்ட மேய்ப்பர் ஆவர்
குவலயத்து மனிதகுலம் மந்தையாகும்
பெருமிதமாய் மேய்ப்பர்களில் அன்பு கொள்வோம்
பசும்புல்லுத் தரையினிலே மேய்ச்சல்காண்போம்
திரும்பிவர அயலவர்க்கும் வழிவ குப்போம்
தெய்வமந்தை பொலிவுறவே தொண்டுசெய்வோம்

ஒன்றே மந்தை; ஒருவனே ஆயன்;
ஒன்றே வேதம்; ஒருவனே தேவன்;
என்றே உலகு அமைவது நன்றே
என்ரே ஒருநாள் இணேவதுகாண்போம்
இன்றே பணிகள் நன்றே செய்வோம்
ஈசன் சித்தம் இனிதுறநிகழும்
நன்றே செய்வோம் நாளும் செய்வோம்
நானிலம் முழுமையும் நல்மந்தையாகும்

**ஆண்டவர் எமது நல்லாயர்—ஆகவே**
**நமக்கொரு இடரும் வாராது.**

---

## முதல்வருட ஞாபகம்

பிறப்பு : 15-3-60 இறப்பு : 4-5-67

"ஓராண்டு மறைந்தது கண்ணே உன் அன்புமுகம் மறந்தோமில்லே."

தன் இனிய பேச்சாலும், செயலாலும் எம்மை மகிழ்வித்துவந்த எங்கள் செல்வப் புதல்வியும், எங்கள் அன்புச் சகோதரியுமான ஐவின் தர்சினி எம்மை ஆருத்துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த முதலாம் வருடம் 4-5-68-ல் பூர்த்தியாகிறது. இதைக்கண்ணுறும் வண. குருமார், சங். கன்னியர், பந்துமித்திரர், விசுவாசிகள், மாணவிகள் இவவைச் சினேயேசு நம் தம்மனசுகள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ள மன்ருடும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளுகிரேம். இவவின் ஆன்ம இளேப்பாற்றிக்காக 4-5-68 சனிக்கிழமைகாலே 6-30க்கு சந்தியோகுமையோர் கோவிலில் ஒரு துக்கப்பூசை நிறைவேற்றப்படும்.

இவவின் பிரிவால் துயருறும்
தந்தை : ச. சந்தியாப்பிள்ளே.
தாய் : பிறிச்ஜெற் சந்தியாப்பிள்ளே.
சகோதரர் : எஸ். ஏ. யோசப், எஸ். பி. கொண்கலஸ், எம். ஜயந்தினி, எஸ். ஜோய், றாபன் சுரேஷ்.

73, 4-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். 64/63

### நன்றியறிந்த தோத்திரங்கள்

பிறேக்நகரின் பாலகனின் இரக்கத்தாலும், பரிசுத்தபிதா 23-ம் அருளப்பரின் அனுக்கிரகத்தாலும் யான் கேட்டுக்கொண்ட மன்ருட்டுக்கள் கிடைக்கப் பெற்றேன். அவர்களின் நாமம் புகழப்படுவதாக.

அச்சுவேலி ஒரு பக்தர்.
63/68

* * *

சாட்டி, சிந்தாத்திரை மாதாவிடம் நான்கேட்ட வரம்கிடைத்தது. நேர்த்தியின்படி இதனேப் பிரசுரிக்கின்றேன். மாதாவுக்கு எனது பணிவான நன்றி.

மாதாவின் அடியாள்.
60/68

* * *

யேசுவின் திரு இருதயத்தின் இரக்கத்தாலும், சதாசகாய மாதாவின் உதவியாலும் எனக்கு ஏற்பட்ட வியாதிநீங்கிக் குணமடையப்பெற்றேன். இவர்களுடைய நாமம் என்றும் புகழப்படுவதாக. நேர்த்தியின்படி இதனேப்பிரசுரிக்கிறேன்,

கு. இ.
62/68 அளம்பில்.

---

● அமெரிக்க ஜனுதிபதித்தேர்தலில் உபஜனுதிபதி ஹியூபேட் ஹம்றியும் ஜனநாயககட்சியின் மூன்ருவது அபேட்சாக முன்வந்திருக்கிருர். ஏற்கனவே அக்கட்சிஅபேட்சகர்களாக செனற்றர் றெபேட் கென்னடியும், செனற்றர் யூஜின் மைக்காதியும் போட்டியாக முன்வந்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## உப சபாநாயகரின் உசிதபோதனை

"தேசிய அரசாங்கம் தமிழ்-சிங்கள மக்களிடையே உண்டுபண்ணியுள்ள நல்லெண்ணப் பாலத்தைத் தகர்த்தெறிய வகுப்புவாதசக்திகள் முனைந்து கொண்டிருக்கும் இந்தவேளை தமிழர்களாகிய நாம் சாதி,சமய வேறுபாடுகளை மறந்து அனைவரும் ஒரேசமுதாயமாகத் தோளோடு தோள்நின்று எமது உரிமைகளைப் பாதுகாக்க உழைக்கவேண்டும் ; நாம் கட்சிவேறுபாடுகளை மறந்து தமிழரென்ற ஓரணியில் திரளவேண்டும்"என்று உடுப்பிட்டி எம்.பி.யும், உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் அவர்கள் வதிரியிலே தம்முடைய பழையமாணவர்களால் அளிக்கப்பட்ட வரவேற்புவிழாவில் பேசியிருக்கின்றார்.

## விவசாயியின் புதியசாதனை

முசலிக் காரியாதிகாரி பிரிவைச் சேர்ந்த நறுவிலிக்குளக் கிராமத்திலே பிரபலவிவசாயியான திரு எஸ். சேவியர் "எச் 4" இனநெல்லை ஒருஏக்கரில் விதைத்து 230 புசல்விளைவித்து அரியசாதனையை நிலைநாட்டிப் பாராட்டுப் பெற்றிருக்கின்றார். அவருக்குச் சொந்தமான ஏனையவயல்களிலும் ஏக்கர்ஒன்றுக்குச் சராசரிவீதமாக 200 புசல்நெல் விளைந்திருப்பதாக அதிகாரிகள் ஊர்சிதம் செய்துள்ளார்கள்.

## இலங்கையின் கண்தானம்

சிங்கப்பூருக்கு ஆறுபுதியகண்களைத் தானமாக அனுப்பியதோடு 1964ஆம் ஆண்டு வெசாக்தினமன்று ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச கண்தானசேவைச் சபையானது இலங்கையிலிருந்து இதுவரை 178கண்களைப் பிறநாடுகளிலுள்ள 14கண்வங்கிகளுக்குத் தானமாக அனுப்பியிருக்கிறது. இந்த வெசாக் மாதத்திலும் அச்சபை பிறநாடுகளிலுள்ள கண்வங்கிகளுக்குக் கண்களை அனுப்பி உதவிசெய்ய ஒருதிட்டம் வகுத்துள்ளது. இன்று 4ஆம்திகதி சனிக்கிழமை ஹொங்கொங் கண்வங்கிக்கு ஒருசோடிகண்களை அனுப்பி வைப்பதோடு பிறநாடுகளுக்கு அதன் கண்தானசேவை ஆரம்பமாகின்றது.

## ஆசிரிய தராதரப் பத்திரம்

தமிழ்ப்பகுதிகளிலுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குத் தராதரப்பத்திரங்கள் தமிழிலேயே வித்தியாபகுதியால் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. அதாவது அப்பத்திரங்களிலே எழுதப்பட வேண்டியனவெல்லாம் தமிழிலேயே இருக்கின்றனவாம்.

## நாற்பதினாயிரம் நாய்கள்

தேடுவாரற்று அங்குமிங்குமாக வீதிகளில் அலைந்துதிரிந்த 40,000 நாய்களுக்குமேல் கடந்த மூன்றுவருடங்களிலும் நாடுமுழுவதும் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றிலே 3,880 நாய்கள் பொலிசாராலும், 38,153நாய்கள் நாய்சுடுவோராலும் சுடப்பட்டன. இந்தநாய்களைக் கொன்றழிப்பதில் கிராமச்சபை, பட்டினசபை, நகரசபை, மாநகரசபை முதலிய உள்ளூராட்சிச் சபைகள் சுமார் 40,000 ரூபா செலவிட்டிருக்கின்றன.

## யாழ்ப்பாணப் பனங்கள்ளு

யாழ்ப்பாணத்திலிருந்து பனங்கள்ளைப் போத்தல்களில் அடைத்துப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்ய அரசாங்கம் பெர்மிற் வழங்குவதுடன் மற்றும் சில வசதிகளையும் செய்துகொடுக்கத் திட்டமிட்டுள்ளது. பனங்கள் இறக்குகிறவர்கள் அது பழுதடையாதிருக்குமாறு இரசாயனமுறையிலே போத்தல்களில் அடைத்து ஏற்றுமதிசெய்ய முன்வந்தால்மட்டுமே பெர்மிற்று வழங்கப்படும். இப்பொழுது தென்னங்கள் மட்டுமே போத்தல்களில் அடைத்து உள்ளூர்ப் பாவனைக்கு விற்பனைசெய்யப்படுகிறது.

## மிருக வைத்தியசாலை

யாழ்ப்பாண முற்றவெளிக்கு மேற்குப்புறமாகவுள்ள முடிக்குரிய நிலத்திலே மிருக வைத்தியசாலை ஒன்று அமைக்கப்பட விருக்கிறது. இவ்வருடம் முடிவதற்குள் இவ்வைத்தியசாலை கட்டிமுடிந்து பாவனைக்குள்ளாக விருக்கிறது.

## மீனவரும் யந்திரப் படகும்

இலங்கை முழுவதிலும் 250 யந்திரப்படகுகள் கடனுதவிமூலம் மீனவர்களுக்குக் கொடுக்கப்பட விருக்கின்றன. இவற்றிலே வடபகுதி மீனவர்களுக்குக் 15யந்திரப்படகுகள் வழங்கப்படும். இவர்களுக்குக் கொடுபடவிருக்கும் யந்திரப்படகுகள் சம்பந்தமான விசாரணை சென்ற திங்கட்கிழமை பருத்தித்துறை மீன்பிடிப்பகுதிக் காரியாலயத்தில் நடைபெற்றது.

## கட்டுக்கரைக்குளத் திருத்தம்

மன்னார் மாவட்டத்திலுள்ள கட்டுக்கரைக்குளத்தை முற்றாகத் திருத்துவதற்குப் 15லட்சம்ரூபா செலவிடத் தீர்மானிக்கப் பட்டிருப்பதாக அறியக்கிடக்கிறது. அதனைத்திருத்திச் செப்பனிடும்வேலைகள் இம்மாதத்திலே ஆரம்பிக்கப்படுமென எதிர் பார்க்கப் படுகிறது. தற்பொழுது கட்டுக்கரைக்குளத்தில் சுமார் நான்குஅடி உயரத்துக்குத் தேங்கியுள்ளசேறு அகற்றப்படுவதுடன் அணைக்கட்டுகளும் மூன்றுஅடிக்கு உயர்த்தப்படவிருக்கின்றன.

## புத்தளத்தில் பெற்றோல் ஆராய்ச்சி

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே கடந்த ஒருவருடகாலமாகப் பெற்றோல்ஆராய்ச்சி நடத்திவந்த பிரான்சியநிபுணர்கள் புத்தளப்பகுதியிலும் பெற்றோல் இருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்பட்டதைத் தொடர்ந்து இப்பொழுது அங்கே முகாமிட்டு ஆராய்ச்சிநடத்தி வருகின்றார்கள்.

## உயிர்வரப்பெற்றஇளைஞன்

இப்பகமுவை எனும் கிராமத்திலே 16வயதுள்ள ஓர்இளைஞனுக்குப் பாம்புகடித்துவிட்டது. மூர்ச்சித்துவிட்டான். அவனை இறந்துவிட்டானென்று பிரேதஅடக்கத்துக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. பாம்புக்கடி விஷவைத்தியர்கள் ஒருவர்பின் ஒருவராகவந்து சிகிச்சைசெய்தும் பலனில்லை. கடைசியாக அகிலஇலங்கைப் பாம்புக்கடி விஷவைத்தியர்கள் சங்க தலைவரான திரு. லோறன்ஸ் அழைக்கப்பட்டார். அவர் இறந்தானென்று கருதப்பட்ட இளைஞனைச் சோதனைசெய்து உயிர்இருப்பதாகக் கூறி மருந்துகளைக் கொடுத்தார். இறந்தவன் உயிர்பெற்றெழுந்தான். ஈமச்சடங்குக்குக் கூடியிருந்தஅனைவரும் ஆச்சரியவசத்தராய் மகிழ்ச்சியடைந்தார்கள்.

## தென்னோலைக் கிடுகுகள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வீடுகள் வேயவும், வேலிகள் அடைக்கவும் அதிகமாகப் பாவிக்கப்படும் தென்னோலைக் கிடுகுகளை ஏறக்குறையப் பத்துவருடகாலத்துக்குப் பழுதுபடாதிருக்கச் செய்யுமாறு அமெரிக்க சமாதானப் படையைச்சேர்ந்த டெனிஸ் கட்ஸ்மன் என்பவர் ஆராய்ச்சிஒன்றில் ஈடுபட்டிருக்கின்றார். இப்பொழுது கோண்டாவிலிலே ஒரு மாதிரிக் கிராமத்தை அமைக்க முயன்றுவரும்இவர் புதுவிதமான ஓர் இரசாயனத்தைக் கிடுகுகளில்பூசி அவைகளை வெயிலிலும், மழையிலுமிருந்து பலவருடங்களுக்குக் காப்பாற்[illegible] கின்றார்.

## அரசியலில் திருப்பம்

"இன்றையநிலையிலே தென்னிலங்கையில் அரசியல்துறையில் புதிய பல திருப்பங்கள் ஏற்படலாமென்று நான் எதிர்பார்க்கின்றேன் ; பெரும்பான்மைச் சமூகத்தினரிடையே ஏற்படவிருக்கும் கொந்தளிப்புகள் சிறுபான்மை இனத்தினரைப் பாதிக்காவண்ணம் தடுப்பதற்கான வழிவகைகளை நாம் நன்கு சிந்தித்துக் கையாளவேண்டும்" என்று உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம்.பியுமான திரு எம். சிவசிதம்பரம் அவர்கள் யாழ்ப்பாண வை. எம். சி. ஏ. மண்டபத்தில் தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டு உபசாரத்தின்போது கூறியிருக்கின்றார்.

## வளர்த்தபாம்பு கடித்தது

மாத்தறையிலுள்ள பிரபல பாம்புக்கடிவிஷவைத்தியரான பார்பூஎன்பவர் நாகபாம்புஒன்றை வளர்த்துவந்தார். ஆனால், ஒருநாள் அப்பாம்பு அவரையே தீண்டிவிட்டது. தீண்டியதும் பாம்புக்கடி விஷவைத்திய நிபுணரான அவர் தன்னிடமுள்ள மருந்துகளையெல்லாம குடித்துப்பார்த்தார். எதுவும் பலன் தரவில்லை. மூர்ச்சித்துவிட்டார். அப்போது அவரை மாத்தறைஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றனர். ஆமாம், யானை அறிந்தறிந்தும் பாகனையேகொல்லும். பாம்பு பால் வார்த்தவனைக் கொல்லும்.

## குரங்குகள் செய்யும்நாசம்

அரசாங்கத்தின் புளிஉற்பத்தியைக் குரங்குகள் பரிநாசம் செய்கின்றன. மன்னாரில் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்ட 100ஏக்கர் புளிஉற்பத்தியும் கடந்த ஆறுமாதங்களாகக் குரங்குகளால் அழிக்கப்பட்டுள்ளது. அனுராதபுரம், குருநாகல், வவுனியாப் பகுதிகளிலும் அவ்வாறே புளிஉற்பத்தி அழிக்கப்பட்டுள்ளது. அதனால் அப்பகுதிகளில் புளிஉற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்களுக்குப் பெரும்நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

## யானைகளின் அட்டகாசம்

இராமநாதபுரம்,வட்டக்கச்சி,கல்மடு முதலிய குடியேற்றதிட்டப் பகுதிகளிலுள்ள தோட்டங்களிலும், வயல்களிலும் 27யானைகள்புகுந்து கடந்த இருவாரகாலமாகப் பயிர்களை அழித்துப் பெரும் அட்டகாசம் செய்துவருகின்றன. பொலிசாரும், வனவிலங்குப் பாதுகாப்பாளரும் சேர்ந்து வெடிகளைக் கொளுத்தியும், துப்பாக்கிகள்கொண்டு வெடிகள்தீர்த்தும் அவைகளை விரட்டிவருகின்றார்கள். அவற்றால்ஏற்பட்டுள்ள சேதங்களை யாழ்ப்பாண அரசாங்கஅதிபரும், கிளிநொச்சி எம். பி.யும்சென்று பார்வையிட்டிருக்கின்றார்கள்.

## பொலிசாரின் நடவடிக்கை

யாழ்ப்பாணத்திலே பஸ்வண்டிகள், தியேற்றர்களிலே புகைபிடிப்பவர்கள் மீது சென்ற 1ஆம்திகதியிலிருந்து பொலிசார் நடவடிக்கையெடுக்கத் தொடங்கியுள்ளனர். இலங்கைப் போக்குவரத்துச்சபை — மாநகரசபைப் பிரமாணங்களுக் கிணங்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பஸ்வண்டிகளிலும், தியேற்றர்களிலும் புகைபிடிப்பவர்கள் உடனடியாக அவற்றிநின்று வெளியேற்றப்படுவர்.

## ஆகாயக் கடிதகட்டணம்

இலங்கையிலிருந்து ஏனையநாடுகள் அனைத்துக்கும் அனுப்பப்படும் எயர் லெற்றர்—அதாவது ஆகாயக் கடித கட்டணம் இந்தவைகாசிமாதம் 2ஆம் திகதிமுதல் உயர்த்தப்பட்டு 50சதமாக விற்பனைசெய்யப்படுகிறது.

* * *

● இஸ்றவேல்நாட்டின் பாதுகாப்பு மந்திரியாய் இருந்துவருகிறவர் ஜெனறல் மோஷே தயான்என்பவர். இவர் ஓர் ஒற்றைக்கண் யுத்தவீரர். அந்நாட்டின் எதிர்காலப் பிரதமரென்று அதிகமாகக் கருதப்படுபவர். புதைபொருள் ஆராய்ச்சியையே தனதுமுக்கிய பொழுதுபோக்காகக் கொண்டுள்ள இவர் சென்ற 21ஆம்திகதி அதில் ஈடுபட்டிருந்தபோது அவர்மேல் கற்பாறைகளும், மண்ணும்விழுந்து அருந்தப்பாக உயிர் தப்பிக்கொண்டார்.


மின்சாரத்தில் இயங்கும்

சென்றிக்

நீர் இறைக்கும் இயந்திரங்களையும்

மண்ணெண்ணெயினல் இயங்கும்

சென்றிக்

யூனியர்—சீனியர்



பாம் குறைந்த நீர் இறைக்கும் இயந்திரங்களையும்

எமது பலதரப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்களுடன் அறிமுகப்படுத்துகிறோம்

ஓட்டோஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1968ஆம் ஹு வைகாசிமீ 4-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org